TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
22 JAN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1981 பிப்ரவரி 27.

மாசி 16, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்."

செய்வதற்கு அருமை உடைய செயல்களையே பெருமைப் பண்பு உடையவர்கள் செய்வார்கள்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் முத்திரைத்தாள் கட்டணம்.

*வினா எண். 281—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் பண்பட்ட நிலத்திற்கும் பண்படாத நிலத்திற்கும் முத்திரைத்தாள் கட்டணம் ஒரே சீராக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) இதை சரி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில் இத்திட்டம் எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

22 JAN 1982

திரு. இரா. தாமரைக்கனி: பண்படாத நிலத்திற்கு விதிக்கப்படும் முத்திரைத்தாள் கட்டண மேல்முறையீடு கோட்டாட்சித் தலைவரிடம் எவ்வாறு பரிசீலனை செய்யப்படுகிறது? மேல் முறையீடு மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் செய்யலாமா? மேல்முறையீடு சம்பந்தமான வழக்குகள் எத்தனை நீதிமன்றத்தில் உள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ரிஜிஸ்ட்ரேஷன் மேல்முறையீடுகள் செய்வது பற்றிய விவரங்கள் இல்லை. எனினும் 1971–73-ல் தயாரிக்கப்பட்ட கைட் லைன்ஸ் அடிப்படையில் ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம் விதிக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: வழிகாட்டிக் குறிப்புகளின்படி நிலத்தின் மதிப்பை நிர்ணயிக்கும்போது பண்பட்ட நிலத்திற்கு பண்படாத நிலத்தின் மதிப்பைக் கொண்டே கட்டணம் நிர்ணயிக்கப்படுவதால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, வழிகாட்டிக் குறிப்புகளைச் சீர்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பழைய வழிகாட்டிக் குறிப்புகளில் இருக்கும் தவறுகளைப் போக்குவதற்காக 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளில் 60 சார்புப் பதிவாளர்கள், 60 உதவியாளர்கள், 60 கடைநிலை ஊழியர்கள் ஆகியோரை நியமித்து மீண்டும் அதுபற்றிப் பரிசிலித்து அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. த. வேணுகோபால்: நிலம் வாங்கும்போது எந்த அடிப்படையில் முத்திரைத்தாள் கட்டணம் விதித்து நிலத்தைப் பதிவு செய்கிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நிலத்திற்கு இருக்கும் தரத்தைப் பிரித்து அதன் மதிப்பை வைத்தும் பக்கத்தில் இருக்கும் நிலம் எல்லாம் எப்படி விற்கப்படுகிறது என்றும் பார்த்து அந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்த முத்திரைத்தாள் கட்டணம் செலுத்தக்கூடிய முறை எப்படி இருக்கிறது என்றால் குறிப்பிட்ட இடத்தில் யாராவது வசதி படைத்தவர்கள் அதிகமான விலை கொடுத்து நிலத்தை வாங்கிவிட்டால் அந்த ஏரியா பூராவும் அந்த அதிகமான விலையே நிர்ணயிக்கப்பட்டு முத்திரைத்தாள் கட்டணம் விதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? இதை மாற்றி சீரான விலையை நிர்ணயித்து அந்த முறையில் முத்திரைத்தாள் கட்டணம் விதிக்கவேண்டுமென்று செய்ய அரசு முன்வருமா? அது பற்றிப் பரிசீலிக்குமா?

1981 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 1971–73-ல் ஒரு கைட்லைன்ஸ் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் கட்டணம் விதிக்கப்படுகிறது. அதில் இருக்கும் குறைபாடுகளைப் பரிசீலனை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் தான் அரசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது போன்று எங்காவது ஒருவர் வசதிபடைத்தவர் அதிகமாக விலைக்கு வாங்கி அந்த அடிப்படையில் முத்திரைத் தாள் கட்டணம் வசூலிக்கப்படுவது பற்றியெல்லாம் பரிசிலித்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யும்.

திரு. என். வரதராஜன்: இந்த முத்திரைத்தாள் கட்டணம் —சாதாரண அரிசன குடிமகன் தன் குடியிருப்புக்காக நிலத்தை வாங்கும்போது பக்கத்தில் தொழிற்சாலைக்கு நிலத்தை வாங்கிய விலைக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சம் என்று நிர்ணயித்ததன் அடிப்படையில் இந்தக் குடியிருப்புக்கும் நிர்ணயித்து முத்திரைத் தாள் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனை நியாயமான விலையில் முறைப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: யார் எப்படி நிலத்தை வாங்கினாலும் கைட்லைன்ஸ் அடிப்படையில் கட்டணம் விதிக்கப்படுகிறது. எங்கே தவறு ஏற்பட்டாலும் அதை மறுபரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

குன்னூர், கோத்தகிரி பகுதியில் வழங்கப் பெற்ற மனைப் பட்டாக்கள்.

*வினா எண் 282—திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குன்னூர், கோத்தகிரி பகுதியில் மனைப்பட்டா வழங்கப் பெற்றவர்களுக்கு இன்னும் நிலம் ஒப்படைக்கப்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், குன்னூர் நகரம், சர்வே எண். 2200/1-இல் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டவைகளில் 55 நபர்களுக்கு மட்டும் அளந்து ஒப்படை செய்யப்படவில்லை. அவர்களுக்கு இந்நிலத்தில் வீட்டு மனைகள் ஒதுக்க இடம் இல்லாததால், குன்னூர் நகரம் சர்வே எண். 2169-இல் வீட்டு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS